**செய்தி வெளியீடு எண் : 722** **நாள் : 03.04.2025**

**போக்சோ சட்டத்தின் கீழ் கைதான நபருக்கு 30 ஆண்டு சிறை தண்டனை மற்றும் ரூ.12,000/- அபராதம்**

கோவை மாவட்டத்தில் கடந்த 2021-ம் ஆண்டு 13 வயது சிறுமியை பாலியல் வன்புணர்ச்சி செய்த குற்றத்திற்காக பேரூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் சதீஷ்குமார் (எ) குஞ்சான் (35) என்பவர் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டது. இவ்வழக்கின் விசாரணை கோவை மாவட்டம் போக்சோ சிறப்பு நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது. இவ்வழக்கின் விசாரணை முடிவு பெற்று 01.04.2025-ம் தேதி எதிரி சதீஷ்குமார் (எ) குஞ்சானிற்கு 30 ஆண்டு சிறைதண்டனை மற்றும் ரூபாய் 12,000 அபராதமாக விதித்து நீதிபதி தீர்ப்பு வழங்கினார்.

இவ்வழக்கினை சிறந்த முறையில் புலன்விசாரணை மேற்கொண்ட புலன்விசாரணை அதிகாரி மற்றும் சாட்சிகளை நீதிமன்றத்தில் சிறந்த முறையில் ஆஜர்படுத்திய நீதிமன்ற பெண் தலைமை காவலர் திருமதி கலையரசி (WHC 809) ஆகியோர்களை கோவை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் Dr.K.கார்த்திகேயன், இ.கா.ப., அவர்கள் பாராட்டினார்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள:

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in TNDIPR, Govt.of Tamil Nadu